<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திட்டக்குடி.</u>

**முன்னிலை: திருமதி. B. ஹரிணிபிரியா, B.A., L.L.B.,(Hons).,**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, திட்டக்குடி.**

**2026ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 28ஆம் நாள் புதன் கிழமை**

**வழக்கிடை மனு எண். 86/2024**

**அசல் வழக்கு எண். 279/1996**

1.குமாராசமி மூப்பானர் (இறந்தார்)
பை வாரிசுகள்

2.ரோவாம்பாள்

3.அம்பிகா

4.இளவர் அஜீத்குமார் (ரெப்.பை கார்டியன்)
தாய் 3ம் வாதி அம்பிகா

5.சிவமணி

6.தனசேகர்

7.வெங்கடேஸ்வரன்

8.ஈஸ்வரன் .....மனுதாரர்கள்/வாதிகள்

எதிர்

1.சின்னசாமி ஆசிரியர் (இறந்தார்)
பை வாரிசுகள் 33 முதல் 36 பிரதிவாதிகள்

2.கோபால்சாமி படையாட்சி

3.பாலகிருஷ்ணன் பண்டிதர் (இறந்தார்)
பை வாரிசுகள் 13 முதல் 17 பிரதிவாதிகள்)

4.குடும்பத் தலைவர் செல்வராஜ் கொண்டையார்
(இறந்தார்) (பை வாரிசு 8-ம் பிரதிவாதி)

5.அருள்மொழி

6.இளவர் கனகவள்ளி (பை கார்டியன்)
தமக்கை 5-ம் பிரதிவாதி அருள்மொழி

7.குப்புசாமி முப்பனார் (இறந்தார்)

8.ஞானாம்பாள்

9.காசிநாதன் மூப்பனார் (இறந்தார்)
பை வாரிசுகள் 10 முதல் 12 பிரதிவாதிகள்

10.முருகையன் (இறந்தார்) பை வாரிசுகள்
29 முதல் 32 பிரதிவாதிகள்

11.தவமங்கை

12.கலையாதவன்

13.சரசுவதி

14.கர்ணன்

15.இளவரசி

16.சிவமாலை

17.சக்திவேல்

18.கிருஷ்ணமூர்த்தி

19.சகுந்தலா

20.மேஜர் விஷ்ணு

21.மேஜர் வசந்த்
மேற்படி 20, 21 மைனர்களுக்கு
ரெப் பை கார்டியன் தாயார்
19-ம் பிரதிவாதி சகுந்தலா

22.சிங்காரவேல்

23வசந்தா

24.மேஜர் சுஜீதா

25.மேஜர் வெங்கடேசன்
மேற்படி 24, 25 மைனர்களுக்கு
ரெப் பை கார்டியன் தாயார்
23-ம் பிரதிவாதி வசந்தா

26. பரமேஸ்வரி

27.மேஜர் அஸ்வின்

28.மேஜர் அட்சயா

.....எதிர்மனுதாரர்கள்/ எதிர்வாதிகள்

இம்மனுவானது 12.02.2024ஆம் தேதியன்று தாக்கல் செய்யப்பட்டு 23.02.2024ஆம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டது, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. பி.ராமசந்திரன் அவர்கள் முன்னிலையாகியும், 19, 23 எதிர்மனுதாரர்கள் /எதிர்வாதிகள் தரப்பில் இந்நீதிமன்றத்தால் அழைத்தும் முன்னிலையாகாததால் கடந்த 02.03.2024ஆம்

தேதியன்று தோன்றாதரப்பினராகப்பட்டுள்ளார். 26 எதிர்மனுதாரர்/ எதிர்வாதி வழக்கறிஞர் திரு.ஜி.கே.வெங்கடேசன் அவர்கள் முன்னிலையாகியும், இம்மனு 23.01.2026ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது, இரு தரப்பு வாதங்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற ஆவணங்கள் ஆகியன பரிசீலனை செய்தும் இதுநாள் வரை என் சீரிய ஆய்விலிருந்து வரும் இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்...

**உத்தரவு**

இம்மனுவில் கண்டுள்ள காரணங்கள் அடிப்படையில் R20, 21 எதிர்வாதிகள் மேஜராகவிட்டார்கள். இவர்களின் காப்பாளர் 19ம் எதிர்வாதி தாய் சகுந்தலா இவர்களையும் R24, 25 எதிர்வாதிகள் மேஜராகிவிட்டதால் இவர்களின் காப்பாளர் 23ஆம் எதிர்வாதி தாய் வசந்தா இவர்களையும் R27, 28 எதிர்வாதிகள் மேஜராகிவிட்டார்கள். காப்பாளர் தாய் 26ஆம் எதிர்வாதி பரமேஸ்வரி ஆகிய கார்ப்பாளர் ஆகிய இவர்களை மேற்படி எண் வழக்கிலிருந்து காப்பாளர்களிலிருந்து நீக்குறவு செய்து உத்தரவிட வேண்டி, உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 32 விதி 9ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

*2.* ***<u>மனு சங்ககதிகளின் சுருக்கம்</u>***

*2.1* மனுதாரர் இம்மனுவில் இரண்டாம் மனுதாரர் / வாதி என்றும் ஏனை மனுதாரர்கள் / வாதிகளுக்காகவும் தானே வழக்கை முன்னின்று நடத்தி வருவதாகவும், இந்த எண்ணில் மேற்கண்ட வழக்கில் 20ம் எதிர்வாதி கிருஷ்ணமூர்த்தி குமாரர் சுமார் 16 வயதுள்ள மைனர் வசந்த் இவர்களுக்கு காப்பாளராக திட்டக்குடி வட்டம் பெலாந்துறை கிராமத்தில் வசிக்கும் 19ம் எதிர்வாதி சகுந்தலா மற்றும் 24ம் எதிர்வாதி சிங்காரவேல் குமாரத்தி சுமார் 17 வயதுள்ள மைனர் சுஜிதா மற்றும் 25ம் எதிர்வாதி சிங்காரவேல் குமாரர் சுமார் 15 வயதுள்ள மைனர் வெங்கடேசன் ஆகிய இவர்களுக்கு பெலாந்துறை கிராமம் கொண்டித்தெருவில் வசிக்கும் 23ம் எதிர்வாதி வசந்தா காப்பாளராகவும், மற்றும் 27ம்

எதிர்வாதி வேல்முருகன் குமாரர் சுமார் 14 வயதுள்ள மைனர் அஸ்வின் மற்றும் 28ம் எதிர்வாதி வேல்முருகன் குமாரத்தி சுமார் 12 வயதுள்ள மைனர் அட்சயா இவர்களுக்கு காப்பாளராக திட்டக்குடி வட்டம், கணபதிகுறிச்சி கிராமம் ரோட்டுத்தெருவில் இருக்கும் 26ம் எதிர்வாதி பரமேஸ்வரி ஆவார். ஆகவே, மேற்படி R20 எதிர்வாதி விஷ்னுக்கு சுமார் 24 வயதும் R21 எதிர்வாதி வசந்த் சுமார் 22 வயதும், R24 எதிர்வாதி சுஜிதா சுமார் 23 வயதும் R25 எதிர்வாதி வெங்கடேசன் சுமார் 21 வயதும், R27 எதிர்வாதி அஸ்வின் சுமார் 24 வயதும் R28 எதிர்வாதி அக்ஷயா சுமார் 22 வயதும் ஆக மேற்படி எண் எதிர்வாதிகள் மேஜராகவிட்டதால் இவர்களை வழக்கில் எதிர்மனுதாரர்களாக சேர்த்து வழக்கு நடத்த ஆணை 32 விதி 12ன்படி மனுதாக்கல் செய்து உள்ள நிலையில் மேற்படி R20, 21 எதிர்வாதிகளுக்கு காப்பாளராக இருக்கும் 19ம் எதிர்வாதி சகுந்தலா மற்றும் R24, 25 எதிர்வாதிகளுக்கு காப்பாளராக இருக்கும் 23ம் எதிர்வாதி வசந்தா மற்றும் R27, 28 எதிர்வாதிகளுக்கு காப்பாளராக இருக்கும் 26ம் எதிர்வாதி பரமேஸ்வரி ஆகியோர்களை மேற்படி எண் வழக்கில் காப்பாளர்களிலிருந்து எதிர்வாதிகளை நீக்குறவு செய்து உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### 3. 26ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்யும் எதிருரை

**3.1** 28ம் எதிர்மனுதாரர் அட்சயா என்பவர் கடந்த 28.07.2007ல் தான் பிறந்துள்ளார். மேற்படியாரின் பிறப்புச் சான்றிதழும் சமூகம் நீதிமன்றத்தில் ஐ.ஏ.303/2023 என்ற மனுவில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த வகையில் 28ம் எதிர்மனுதாரருக்கு 18 வயது இன்னும் பூர்த்தியாகவில்லை. அந்த வகையில் 28ம் எதிர்மனுதாரரை மேஜராக சட்டப்படி கொள்ள இயலாது. எனவே மனுதாரரால் 28ல் எதிர்மனுதாரரை பொருத்து தாக்கல் செய்துள்ள மனுவும் செலவுடன் தள்ளுபடிக்கு அருகமானதாகும். எனவே 23ம் எதிர்மனுதாரரின் காப்பாளரும் வழக்கு நண்பரும் தாயாருமான 26ம் எதிர்மனுதாரர் வழக்கை முன்னின்று நடத்த உரிமையுடையவர் ஆவார்.

4. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

6. **இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்**

6.1 **மனுதாரர் தரப்பு வாதம் என்னவெனில்** R20 எதிர்வாதி விஷ்னுக்கு சுமார் 24 வயதும் R21 எதிர்வாதி வசந்த் சுமார் 22 வயதும், R24 எதிர்வாதி சுஜிதா சுமார் 23 வயதும் R25 எதிர்வாதி வெங்கடேசன் சுமார் 21 வயதும், R27 எதிர்வாதி அஸ்வின் சுமார் 24 வயதும் R28 எதிர்வாதி அக்ஷயா சுமார் 22 வயதும் ஆக மேற்படி எண் எதிர்வாதிகள் மேஜராகவிட்டதால் இவர்களை வழக்கில் எதிர்மனுதாரர்களாக சேர்த்து வழக்கு நடத்த ஆணை 32 விதி 12ன்படி மனுதாக்கல் செய்து உள்ள நிலையில் மேற்படி R20, 21 எதிர்வாதிகளுக்கு காப்பாளராக இருக்கும் 19ம் எதிர்வாதி சகுந்தலா மற்றும் R24, 25 எதிர்வாதிகளுக்கு காப்பாளராக இருக்கும் 23ம் எதிர்வாதி வசந்தா மற்றும் R27, 28 எதிர்வாதிகளுக்கு காப்பாளராக இருக்கும் 26ம் எதிர்வாதி பரமேஸ்வரி ஆகியோர்களை மேற்படி எண் வழக்கில் காப்பாளர்களிலிருந்து எதிர்வாதிகளை நீக்குறவு செய்ய வேண்டும் என்று வாதிடப்பட்டுள்ளது.

6.2 **எதிர்மனுதாரர் தரப்பு வாதம் என்னவெனில்** 28ம் எதிர்மனுதாரர் அட்சயா என்பவர் கடந்த 28.07.2007ல் தான் பிறந்துள்ளார். மேற்படியாரின் பிறப்புச் சான்றிதழும் சமூகம் நீதிமன்றத்தில் ஐ.ஏ.303/2023 என்ற மனுவில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த வகையில் 28ம் எதிர்மனுதாரருக்கு 18 வயது இன்னும் பூர்த்தியாகவில்லை. அந்த வகையில் 28ம் எதிர்மனுதாரரை மேஜராக சட்டப்படி கொள்ள இயலாது. எனவே மனுதாரரால் 28ல் எதிர்மனுதாரரை பொருத்து தாக்கல் செய்துள்ள மனுவும் செலவுடன் தள்ளுபடிக்கு அருகமானதாகும் என்று வாதிடப்பட்டுள்ளது.

6.3 இந்நிலையில் எதிர்மனுதாரர் தரப்பில் 28ம் எதிர்மனுதாரர் அட்சயா என்பவர் கடந்த 28.07.2007ல் தான் பிறந்துள்ளார். அந்த வகையில் 28ம் எதிர்மனுதாரருக்கு 18

வயது இன்னும் பூர்த்தியாகவில்லை என்று கூறியுள்ள நிலையில், தற்போது இம்மனு தாக்கல் செய்த தேதியான *12.02.2024*ஆம் தேதியில் மேற்படி *28*ஆம் எதிர்மனுதாரரான அட்சயா என்பவருக்கு *18* வயது பூர்த்தியாகிவிட்டது. மேலும் இவ்வழக்கானது *25* ஆண்டுகள் பழமையான வழக்கு என்பதால், மேற்படி இவ்வழக்கில் *19, 23, 25* எதிர்மனுதாரர்களுக்கு சம்மன் சார்வு செய்யப்பட்டு, வழக்கின் *19, 23* எதிர்மனுதாரர்கள் தரப்பில் இந்நீதிமன்றத்தால் அழைத்தும் முன்னிலையாகாததால், மேற்படியாரை தோன்றாதரப்பினராகப்பட்டுள்ளார்கள். எனவே மனுதாரருக்கு தமது வழக்கை எடுத்துரைக்க வாய்பளித்து விசாரித்து சாட்சியம் மற்றும் சட்டத்தின் அடிப்படையில் தீர்வு காண்பதே சட்டம் மற்றும் இயற்கை நீதிக்கோட்பாடுகளின்படி சரியானதாக இருக்கும் என்பதாலும், மேற்படி இவ்வழக்கில் R20, 21 எதிர்வாதிகள் மேஜராகவிட்டார்கள். இவர்களின் காப்பாளர் *19*ம் எதிர்வாதி தாய் சகுந்தலா இவர்களையும் R24, 25 எதிர்வாதிகள் மேஜராகிவிட்டதால் இவர்களின் காப்பாளர் *23*ஆம் எதிர்வாதி தாய் வசந்தா இவர்களையும் R27, 28 எதிர்வாதிகள் மேஜராகிவிட்டார்கள். காப்பாளர் தாய் *26*ஆம் எதிர்வாதி பரமேஸ்வரி ஆகிய கார்ப்பாளர் ஆகிய இவர்களை மேற்படி வழக்கிலிருந்து காப்பாளர்களிலிருந்து நீக்குறவு செய்வதன் மூலம் வழக்கை திறம்பட தீர்ப்பதற்கு இயலும் என்பதனை கருத்திற்கொண்டும் மனுதாரருக்கு ஒரு வாய்ப்பினை அளிப்பதால் பன்முகத்தன்மை கொண்ட வழக்குகள் தொடரப்படாமல் இருக்கும் பொருட்டும், இம்மனுவை அனுமதிக்க இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

7. **இறுதியாக**

இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தரிடம் சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 28ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**(ஓம்.B. ஹரிணிபிரியா )**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திட்டக்குடி.

| | | |
|---|---|---|
| மனுதாரர் தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் | : | இல்லை |
| எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் | : | இல்லை |

**(ஓம்.B. ஹரிணிபிரியா )**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திட்டக்குடி.